# இந்திய விமானம் நொருங்கி 69 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 1 இதழ் 187
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17-8-1991

[புதுடில்லி]

கல்கத்தா விமான நிலையத்திலிருந்து இம்பாலிற்குச் சென்று கொண்டிருந்த இந்தியன் ஏயர் லைன்ஸ்' விமானம் ஒன்று இம்பால் விமான நிலயத்துக்குச் சற்றுச் சமீபமாக வீழ்ந்து நொருங்கியதில் விமானத்தில் பயணம் செய்த 69 பேரும் கொல்லப்பட்டனர். நேற்று நண்பகல் நடை

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ் மக்கள் படும் கஷ்டங்கள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தில் மக்கள் உணவின்றிப்படும் கஷ்டங்களையும் சொந்தஇடங்களில் இருக்க முடியாமல் அகதிகளாக அல்லல்பட்டுத் திரிவதையும், ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் இம்முறை விளக்கமாக எடுத்

(4-ம் பக்கம் பார்க்க)

## காவலரண் தாக்குதலில் பொலிஸார் பலி

[கொழும்பு]

கிழக்கில் மட்டக்களப்பு பொலிஸ் காவலரண்கள் மீது புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் சில பொலிஸார் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதி ஒன்றுக்கு அண்மையில் இருந்த இக் காவலரண்

[4-ம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவு முகாம்

# புலிகளிடம் பறிபோயிருந்தால் நாடு அழிவுக்குள்ளாகியிருக்கும்

## ஹசலகயில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு முகாம் புலிகளிடம் பறிபோயிருந்தால் எமது முழுநாடும் நாட்டுமக்களும் அழிவுக்குள்ளாகியிருப்பார்கள்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்றுமுன்தினம் ஹசலக என்னும் இடத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசியபோது இவ்வாறு கூறினர்.

ஆனையிறவு முகாமுக்குள்விடுதலைப்புலிகள் 'புல்டோசர்' உதவியுடன் முன்னேறமுயன்ற சமயம் அதைத்தடுக்கும் முயற்சியின்போது கொல்லப்பட்ட ஹசலக்க என்ற இடத்தைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் காமினி குலரத்தினவின் வீட்டுக்கு நேற்று முன் தினம் ஜனாதிபதி சென்றிருந்தார் அங்கு அந்தச்சிப்பாயின் பெற்றோரை சந்தித்து உரையாடி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவிலிருந்து ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவிலிருந்துபரந்தன், உருத்திரபுரம், திருவையாறு போன்ற பகுதிகளிலுள்ள குடிமனைகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

அப்பகுதியில்பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றிருப்பதால் எவரும் இத்தாக்குதல்களினுல் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பல வீடுகள் ஷெல் வீழ்ந்து சேதமாகியுள்ளன,

(4ம் பக்கம் பார்க்க)

## மறியல் போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்

(யாழ்ப்பாணம்

நேற்றுகாலை யாழ். செயலகம் முன் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு மாபெரும் மறியற்போராட்டத்தை நடத்தினர்இதனுல்செயலகம் நேற்று இயங்கவில்லை.

யாழ். மாவட்ட மக்களின் உலர்உணவு நிவாரணத்தை ரசு நிறுத்தியதற்கு எதிராக மக்கள்போர்க்கொடி உயர்த்தி வந்து யாழ். செயலக முன்றலில் மறியற் போராட்டத்தை நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பித்தனர்

மக்கள் 10 மணிவரை பல

(4-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் சிதம்பரம் தாக்கப்பட்டார்

[புதுடில்லி]

மத்திய வர்த்தக இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் மற்றும் இரு காங்கிரஸ் எம். பிக்களும் நேற்று பகல் திருச்சிராப்பள்ளிக்கு அருகே அ. இ. அ. தி மு க தொண்டர்களால் தாக்கப்பட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி யாழ்.அரச அதிபர் மாதமொருமுறை சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

வடமாகாணத்தில் தற்போது நிலவிவரும் உணவுத் தட்டுப்பாட்டை போக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்னவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பனவற்றை தமக்கு உடனுக்குடன் தெரிவிக்கும்படியும், மாதம் ஒருமுறை தவருது கொழும்புவந்து தம்மையும், பிரதம மந்திரியையும் சந்திக்குமாறும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரைக் கேட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (வி)

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் கடந்த மாதம் 18-ம் திகதி கட்டைக்காட்டுப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் கோவிந்தன் (நடராசா-சிதகுமார், அல்வாய்-மேற்கு) கடந்த 28-ம் திகதி இதே இடத்தில் நடைபெற்ற மோதலில் சுபராஜ் (செல்லத்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் நம்பிக்கை தென்பட்டிருக்கிறது !

- செல்லச்சாமி.

[கொழும்பு]

தமிழர் பிரச்னைக்கு தீர்வுவரும் என்ற நம்பிக்கை தென்படத் தொடங்கியிருப்பதாக கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

கொச்சிக்கடை ஸ்ரீராமநாதன் வீதியில் நேற்று முன் தினம் புதிதாக கட்டப்பட்ட பரந்தன் இரசாயன கம்பனியை திறந்து வைத்து பேசுகையில் கூறினுர்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீவு கிட்டும் காலத்தில் இப்பகுதியில் பல தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்ருர். (சி)

## வடக்குகிழக்கு அகதிகளுக்கு மாதம் 20 கோடி தேவை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்த நிலைமை காரணமாக அகதிகளுக்கு மாத்திரம் மாதாந்தம் 20 கோடி ரூபா செலவிடப்படுவதாக பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அரசாங்கம் அறவிடும் வரிப்பணத்தில் பெருமளவை நாட்டின் பாதுகாப்பிற்கு செலவிடவேண்டியுள்ளது.

நாட்டில் தொடர்ந்தும் யுத்த நிலை காணப்படுவதால்

(4ம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணியில் 5000 படையினர்

(கொழும்பு]

வெற்றிலைக்கேணி பகுதியில் தற்போது 5000 படையினர் நிலைகொண்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாமிலிருந்து வெற்றிலைக்கேணிக்கு பாதை ஒன்று அமைக்கப்பட்டு அதன் பாதுகாப்பிற்காக இருமருங்கிலும்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மாணவரும் பரீட்சை எழுத வசதி

[யாழ்ப்பாணம்]

கல்விப்பொதுத் தராதர உயர்தர 1991-ஆம் ஆண்டின் பரீட்சை யாழ். மாவட்டத்தில் நடக்கும்போது, இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்தில்பரீட்சை எடுக்க விரும்புவோருக்கும்

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேஷன் 2½ மாத நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டவை. தொர்டர்பு: சி ராஜேந்திரம் (பஜனே மாமா) மே/பா நியூ பார்மசி, 5-ம் கட்டை, ஆஸ் பத்திரி வீதி, மானிப்பாய் 5131)

## வியாழ மாற்றம்

(14-8-91) வியாழமாற்றமும், (22-8-91) செவ்வாய் மாற்றமும் எல்லா ராசிகளின் பலன்களும் புதிய வெளியீடு ரூ. 6/50 எங்கும் கிடைக்கும், ரகுநாதன் பதிப்பகம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof:- சத்திய தாசன், ஞானம்ஸ் சித்தன் கேணி. (சி-5112)

## நல்லூரில் மீரா நாவல்

பரிசளிக்கக்கூடியவை இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள்; சிறுவர்களுக்கு "இராவணன் கோட்டை" இன்னும் உயிரோட்டமான பத்து "மீரா நாவல்களும்" விற்பனையாகின்றது. [சி-5114]

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும், ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு நேரில். சனி, ஞாயிறு காலை 11-00—12-00 மணி. S ஜெயராசா, 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம் (சி4962)

## தரன் ஸ்ருடியோ

பாஸ்போர்ட், அடையாள அட்டை - என்லாஜ்மென்ட், கலர்ப்படங்களுக்கும், றபர் சீல்கள், விளம்பர போட்டுகள், பிளாஸ்ரிக், ஸ்ரிக்கர்கள், டிசைன்கள் ஓவிய வேலைகட்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5065)

## பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள் சஞ்சிகைகள் விலைக்கு வாங்குவோம். புத்தகக்கடை கல்வியங்காடு. (சி-5127)

## சோயா அவரை

சோயா அவரை தொகையாகவோ சில்லறையாகவோ கொள்வனவு செய்யப்படும். அண்ணா தொழிலகம், இணுவில். (எ 1499)

## அதிஷ்டம் அழைக்கின்றது

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகத்தடை, தெய்வசாபம், குருசாபம், நாகசாபம் போன்றவை நீங்கி அதிஷ்டத்துடன் வாழ வழி காட்டுகின்றோம்: நிவாரண யந்திரங்களும நாலூறு கண்ணூறு யந்திரங்களும் வழங்குகின்றோம். நேரில் சாதகத்துடன் வரவும்: ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை றோட், [அரசடிச் சந்தி] நல்லூர். (சி 5116)

## ENGLISH (ஆங்கிலம்)

G. C. E. (O/L) (A/L) மற்றும் மாணவர்களுக்கும் English Grammer, Spoken English, English Literatureரும் English Teachers Examination பரீட்சார்த்திகளுக்கு விசேட பயிற்சியும் அளிக்கப்படுகிறது. விபரங்களுக்கு: V. N. Kandasamy A.I.B Part I (London) Inter (London), 87, புகையிரத வீதி, கொக்குவில். (சி 5132)

## யானை தாக்கியது

(ஊர்காவற்றுறை)

உருத்திரபுரம் வாசியான எஸ். திருநாவுக்கரசு (வயது 50) என்பவர் அண்மையில் வயலுக்குள் வந்த யானையினால் தாக்குண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (59)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

UNIVERSITY OF JAFFNA

## Thileepan Research Fellowship for Bio-technology

Graduates / Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable Applicant after an interview.

Monthly allowance of Rs. 2,500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

The closing date for applications will be on 30-09-1991.

Registrar,
University of Jaffna.

(A-1505)

---

# யாழ். கொழும்பு பயணிகள் போக்குவரத்து கஷ்டத்தை நீக்குவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு பயணிகள் தாண்டிக்குளம் பகுதியிலுள்ள இராணுவ பரிசோதனை முகாமுக்குச் செல்வதற்கு பலமைல்கள் நடந்து சிரமப்படுவதை நிறுத்த முயற்சி செய்யப்பட்டு வருவதாக யாழ். அரசஅதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

தாண்டிக்குளம் பகுதியைத் தாண்டுவதற்கு லொறிச்சாரதிகளும், பிரயாணிகளும் படும் வேதனைகளையும், கஷ்டங்களையும் தான் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதாகவும், அதற்கு அவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், பிரயாணிகள் நீண்டதூரம் நடப்பதற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைப்பதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனராம். (வி)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## இடிபாடுகளை அகற்றுதல் தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை தனது எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலுள்ள சகல இடிபாடுகளையும் அகற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக கீழே காட்டப்பட்டுள்ள வீதிகளிலுள்ள இடிபாடுகளை அகற்றும் பணியை ஆரம்பித்துள்ளது

பொதுமக்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது இடிபாடுகளை அகற்றிப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கீழ்க்குறிப்பிடப்பட்ட இடங்களிலுள்ள ஆதனங்களுக்குள்ளிருக்கும் இடிபாடுகளை அகற்றவிரும்புவோர் மேற்படி வேலையைச் செய்யும் முகவரோடு தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யும்வண்ணம் வேண்டுகின்றேன்.

குறிப்பிட்ட பணி 31.08.1991 இல் முடிவடைந்த பின்னர் எவராவது தமது காணிக்குள்ளிருக்கும் இடிபாடுகளை அப்புறப்படுத்தி வீதியோரங்களிலோ அல்லது பொது இடங்களிலோ போடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை சபையின் வேலைப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

### வீதிகளின் பெயர்கள்

01. பிரதான வீதி
02. நீதிமன்ற கட்டிட சுற்றுடல்
03. யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிட சுற்றுடல்
04. கொட்டடி பகுதி வைரவர் கோவிலடி
05. முத்தமிழ் வீதியும் குறுக்கு வீதிகளும்
06. பருத்தித்துறை வீதி
07. முதலாம் குறுக்குத் தெரு சுற்றுடல்
08. வேம்படி மகளிர் பாடசாலை
09. யாழ் மத்திய கல்லூரி சுற்றுடல்
10. தேவாலய வீதி சுற்றுடல்
11. மணிக்கூட்டு வீதி
12. குறுக்கு வீதிகள்
13. மாட்டின் வீதி
14. புகையிரத நிலைய சுற்றுடல்
15. வேம்படி வீதி சுற்றுடல் [கான்கள் உட்பட]

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-08-1991.

[எ 1508]

---

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

எமது நிறுவன மாணவர்களுக்கான
5-ம் ஆண்டு புலமைப் பரிசில்
முன்னோடிப் பரீட்சை
18-08-91 ஞாயிறு
பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

நிர்வாகி.

[ஏ-1504]

---

# முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் திரவ சவர்க்காரம்,
வேப்பெண்ணெய் நிரப்பிய போத்தலையும்
அடைத்த மூடியையும் இணைத்து ஒட்டப்பட்ட
தாளில் மில்க்வைற் சின்னம் உள்ளதா
என்பதைக் கவனித்து வாங்குங்கள்.
விலை ½ போத்தல் ரூபா 50/-.

மில்க்வைற் இலங்கை MWS MILKWHITE

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

[ஏ-1503]

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## விஞ்ஞானபீட இரண்டாவது அரையாண்டுப் பரீட்சைகள் 1990

1990ம் ஆண்டிற்குரிய இரண்டாவது அரையாண்டுப்பரீட்சை 14-10-91இல் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 15-09-1991இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களைப் பரீட்சைக் கிளைப் பிரதிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ 10 செ. மீ. அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

(எ-1506)

---

# புங்குடுதீவு கதிர்காமம்

உற்சவத்திற்கு காணிக்கை வழங்க விரும்பும்
பக்தர்கள் பினவரும் முகவரியில்
தொடர்புகொள்ளவும்.

திரு. செ. நடராசா
தலைவர்

கதிர்காமம் அறங்காவலர் சபை,
புங்குடுதீவு 1.

(சி-5130)

---

JAFFNA COLLEGE 1823 1872 JESUS CHRIST THE LIGHT THE LIFE

# யாழ்ப்பாணக் கல்லூரி

மூன்றாந்தவணை 1991-ம் ஆண்டு
ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி
திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

அதிபர்

கல்லூரிப் பூங்கா,
வட்டுக்கோட்டை.

(ஏ-1507)

Nallur Branch Library

★ ஆனையிறவு முகாமினுள் காயப்பட்ட படையினரின்

# கை, கால்களை அகற்றிய சத்திர சிகிச்சைக்கு கூரிய'கத்தி'யும், 'பிளேற்'றும் பயன்படுத்தினேம்

## - சார்ஜன் மேஜர் கொடமுன

(நேற்றைய தொடர்ச்சி)
(கொழும்பு)

10ம் திகதி ஆரம்பமான போர் மிக உக்கிரமாக தொடர்ந்து கொண்டிருந்தது. புலிகளின் தாக்குதலை படையினர் சமாளித்துக் கொண்டிருந்தனர். 14ம் திகதி போரில் மிக மோசமாக காயமடைந்த நாலு படையினர் சிகிச்சைக்காக வந்தனர்.

அவர்களுக்கு கை, கால்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டியிருந்தது. உடனடியாக இந்த முயற்சியில் இறங்கினேம். ஒருவருக்கு கால் கழற்றப்பட்டது. நாலவருக்கு கை கழற்றப்பட்டது. இதற்கான சத்திரசிகிச்சையை ஒருவாறு செய்துமுடித்தோம்.

இந்த சத்திர சிகிச்சைக்கு அதற்குரிய ஆயுதங்கள் எதனையும் நாம் பயன்படுத்தவில்லை. பயன்படுத்தியதெல்லாம் ஒரு கூரான கத்தியும், முகச்சவரம் செய்யவைத்திருந்த 'பிளேற்'றுமே. இவைதான் அப்போது எம்மிடமிருந்த கூரான ஆயுதங்களாகும். இவ்வாறு சத்திரசிகிச்சைகளை ஒருவாறு செய்து முடித்தோம். உடனுக்குடன் 'கத்தியையும்' பிளேற்'றையும் தொற்று நீக்குவதற்காக கொதிநீரில் போட்டெடுத்து சிகிச்சைக்கு பயன்படுத்தினேம்.

மயக்க மருந்து கொடுத்து சத்திர சிகிச்சை செய்யவேண்டிய சிகிச்சையை எல்லாம் சாதாரண நிலையில் மேற்கொண்டோம்.

முகாமிலிருந்த ஒவ்வொரு சிப்பாயின் தேவையும் மிக மிக அவசியமாயிருந்தது. ஒவ்வொரு சிப்பாயும் கையில் ஆயுதம்ஏந்தி போரிட வேண்டியதொரு நிலையில் முகாமிலிருந்தவர்கள் இருந்தார்கள். துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் ஒவ்வொரு சிப்பாயும் யுத்த முனையில் புலிகளின் முன்னேற்றம் குறித்தும் கண்காணிக்கவேண்டிய நிலையிலுமிருந்தது.

### யுத்த முனைக்கு அனுப்பினேம்

காயமடைந்து வரும் சிப்பாய்களை உடனுக்குடன் சிகிச்சையளித்து யுத்தமுனைக்கு திருப்பி அனுப்பிக்கொண்டிருநதோம். 30க்கும் மேற்பட்டவர்களை இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் திருப்பி அனுப்பினேம். சிலர் அவயவங்களை இழந்த நிலையிலும் யுத்தம் புரிய வேண்டியதொரு சூழ்நிலை ஏற்பட்டது. பலத்த உட்காயங்களுடனும் பல சிப்பாய்கள் இருந்தனர்.

### புலிகளின் தாக்குதல்

இதேவேளையில் மிகவும் கஷ்டப்பட்டோம். இந்நேரத்தில் புலிகளின் தாக்குதல் மிக உக்கிரமாயிருக்கும். மேலும் முகாமினுள் ஒரே இருளாகவே இருந்தது. அடுத்த சில தினங்களில் நிலவுகாலமாதலால் எம்மால் ஓரளவு சமாளிக்கக் கூடியதாயிருந்தது.

இதனல் படையினர் இருட்டு நேரத்தை விட ஓரளவு புலிகளை சமாளிக்கக்கூடியதாயிருந்தது. புலிகள் தாக்குதலநடாத்தும் இலக்குகள் ஓரளவு புரிந்தன புலிகளின் காவலரண்களும் தெரியக்கூடிய நிலையிலிருந்தது.

விமானப்படையின் தாக்குதல் எமக்கு ஓரளவு தென்பை கொடுத்தது. விமானப்படை மூலமே புலிகளின் உக்கிர தாக்குதலை சமாளிக்க வேண்டியிருந்தது. முகாமை சுற்றிச்

(ஆனையிறவு முகாம முற்றுகையினுள் இருந்த இராணுவ மருத்துவ பிரிவைச் சேர்ந்த மேஜர் கொடமுன 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியை இங்கு தொடர்ச்சியாகத் தருகின்றேம்.)

சுற்றிவந்து விமானங்கள் குண்டுகளைப்பொழிந்தவண்ணமிருந்தன. எனினும் இதற்கு மத்தியிலும் புலிகள் மிகவும் உக்கிரமாக முகாமை நோக்கியும், விமானங்களை நோக்கியும் தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்தார்கள்

விமானங்கள் குண்டுமாரி பொழிந்ததென்றே கூறவேண்டும். புலிகளின் தாக்குதல் மிக உக்கிரமாயிருக்கும் போதெல்லாம் விமானங்கள் அந்த இலக்குகளை நோக்கி ஆக்ரோஷமாகத் தாக்கும்.

குண்டுகளை பொழிந்து கொண்டிருக்கும் விமானங்கள் சில வேளைகளில் அரிசியையும் பொட்டலங்களாக வீசும் இது எமக்கு மறக்கமுடியாதொரு நிலையை ஏற்படுத்தியது. ஆங்காங்கே பொன்னுங்காணி கீரையும், கோழிக்குஞ்சுகளும் கூட வீசப்பட்டன. எவ்வளவு வீசப்பட்டது. அதில் எவ்வளவு எமக்குக் கிடைத்ததென்பது சரியாகத் தெரியவில்லை. எனினும் இது எமக்கு மறக்க முடியாததொரு நிகழ்ச்சியாகும்.

பெருமளவில் நாம் 'கிறீம் கிறக்கர்' விஸ்கோத்துக்களையும், வெண்ணை, பருப்பு, தகரங்களில் அடைக்கப்பட்டிருந்த மீன்களையும் உட்கொண்டோம். இவையெல்லாவற்றையும் மிகவும் பாதுகாப்பான இடங்களிலேயே உட்கொண்டோம்.

### மருந்துகள்முடிவடைந்தன

இதற்கிடையில் கையிருப்பிலிருந்த மருந்துகள் முடிவடையத்தொடங்கியது. இது எமக்குப் பெரும் இக்கட்டானதொரு நிலையை ஏற்படுத்தியது. இடைக்கிடை விமானங்கள் மருந்துகளை வீசின. இவற்றைக்கொண்டும் ஒருவாறு சமாளித்தோம் காயப்பட்டிருந்த படையினரில் பெருமளவினரால் சாப்பிடமுடியவில்லை. அவர்களுக்கு நீர் ஆகாரமே கொடுக்கவேண்டியிருந்தது, ஏற்கனவே களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நீராகாரங்களைக் கொண்டு ஒருவாறு சமாளித்தோம்.

இதற்கிடையில் புலிகளின் உக்கிரதாக்குதல் பல முனைகளிலிருந்தும் தொடர்ந்தது. படையினர் போரிட்டு தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டியதொரு நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் எம்மை மீட்க வெற்றிலேகேணியில் படையினர் தரையிறங்கிய செய்தியும் எமக்குக் கிடைத்திருந்தது.

தினமும் இந்தப் படையினரின் வரவை எதிர்பார்த்திருந்தோம். ஆனல் அவர்களின் வருகை மிகத் தாமதமாக, எமக்குப் பெரும் நெருக்கடிஏற்பட்டவண்ணமிருந்தது. ஏதோவோரு மனநிலையில் போரிட்டுக்கொண்டிருந்தோம்

### வெளியுலக தொடர்புகள்

முகாமிலிருந்து வெளியுலகிற்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டது எமக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. எமது நிலையைக் கூறமுடியாதொரு நிலையும் எமக்கு ஏற்பட்டது. எனினும் விமானங்களுடன் ஓரளவு தொடர்பு இருந்தது.

புலிகளின் தாக்குதல் சில வேளைகளில் மிக உக்கிரமானதாயிருக்கும். இவற்றைச் சமாளிக்க நாம் பெரும்பாடு படவேண்டியிருந்தது இவ்வேளையில் முகாம் எங்தும் மோட்டார், ரொக்கட்குண்டுகள் வீழ்ந்து பெரும் சேதத்தை உண்டுபண்ணும்.

(தொடரும்)

# இராசி பலன்

17-08 1991
சனிக்கிழமை

**தமிழுக்கு ஆவணி 01**

அட்டமி பி. இ. 3-02 வரை; விசாகம் மு. இ. 9-11 வரை. இராகுகாலம் காலை 9-05 முதல் 10-35 வரை. சுபநேரம் மாலை 3-05 முதல் 4-35வரை. சித்தயோகம்.

மேடம்: தொழில் சிக்கல், பணத்தகராறு, குடும்பகவலை.

இடபம்: தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, பயணங்கள் அனுகூலம்

மிதுனம்; காரியசித்தி, திருமணயோகம், பணவரவு.

கடகம்: அதிகயோசனை, புத்திரர் கவலை, அவமதிப்பு.

சிங்கம்: தவறுன போக்கு, இனசனப்பகை, ஆராய்ச்சி

கன்னி: தொழில் சிறப்பு, கற்பனை மிகுதி, சகோதர உதவி.

துலாம்: தாழ்ந்த நிலை, உடல் உபாதை, காரியதடை.

விருச்சிகம்: அதிர்ஷ்ட வாய்ப்பு, தொழில் லாபம், பாராட்டு.

தனுசு: தந்தையுடன் தகராறு, புதிய பிரச்சனை, பணச்சுமை.

மகரம்: மனைவியால் துன்பம், சலசலப்பு, தொழில் நஷ்டம்.

கும்பம்: ஏமாற்றப்படுதல், கைப்பொருள் இழப்பு, அந்நியவாசம்.

மீனம்; வேலைப்பழு, உடல் சோர்வு, பதற்றம்.

- ஜோஸ்யர்

# புதிய அமைப்பு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள பொதுநலக்கழகங்கள் சங்கங்கள், பொதுத் தொண்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழர் நலன்காக்கும் ஒன்றியம் என்ற அமைப்பு நேற்றுமுன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தின் செயற்குழுவுக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் சிவமகாராசா, செயலாளர் எஸ். ஆர். முத்தையா, இணைப்பாளர் சந்திரகாந்த சர்மா

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் ஒவ்வொருவர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிறப்பு இறப்பு பதிவு

# ஒருவருட காலமாக மேற்கொள்ளப்படவில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளம், சாளம்பைக்குளம், பம்பைமடு, கல்மடு, ஓமந்தை போன்ற பகுதிகளில் கடந்த ஒரு வருட காலமாகப் பிறப்பு, இறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று வவுனியாச் செயலக அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது

இக்காலப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள், பாதுகாப்பின்மைக் காரணங்களால் அப்பகுதிகல் கடமையாற்றிய இறப்பு, பிறப்புப் பதிவாளர்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

இப்பதிவுகள் மேற்கொள்ளப்படாததால், இறந்தவர்களின், நெருங்கிய உறவினர்களும் மற்றும் பெற்ருேரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [193]

# வவுனியாவிலிருந்த டெலக்ஸ் இயந்திரம் அனுராதபுரத்திற்கு மாற்றம்

(வவுனியா)

வவுனியா தபால் அலுவலகத்தில் பாவனைக்காக பொருத்தப்பட்டிருந்த டெலெக்ஸ் இயந்திரம் கழற்றப்பட்டு இராணுவத்தினரால் அனுராதபுரத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்த இயந்திரம் தற்போது அனுராதபுரம் தபால் அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவையடுத்தே இந்த இயந்திரம் வவுனியா தபால் அலுவலகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. (153)

# வடபகுதி விவசாய அபிவிருத்திக்கு 400 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

'கெயர்' நிறுவனம் வடபகுதி விவசாய அபிவிருத்திக்கென 400 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது

'கெயர்' நிறுவனம் ஆரம்பகாலத்தில் வடபகுதியில 15 ஆயிரம் விவசாயிகளுக்குப் பெருமளவில் உதவிகளைச் செய்துவந்தது. பின்னர் 7 500 விவசாயிகளுக்கு மட்டுமே உதவிகளைச் செய்துவருகிறது.

கடந்த வாரம் கொழும்பில் உள்ள கெயர் நிறுவன அதிகாரிகளுடன், யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனுக மீண்டும் 15 ஆயிரம் விவசாயிகளுக்கு உதவிகளைச் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், அதற்குத் தாம் 400 கோடி ரூபாவைச் செலவு செய்யவிருப்பதாக அந்த அதிகாரிகள் கூறியதாகவும் தெரியவந்துள்ளது. (வி)

# மட்டு நகரில் வசிப்போர் விபரங்கள் திரட்டு!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரில் நிரந்தரமாக வசிப்போரின் விபரங்களை கிராமசேவை அலுவலர்கள் தற்போது திரட்டி வருகின்றனர்.

நிரந்தரவதிவாளர் பற்றிய விபரங்கள் மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு பாதுகாப்பு பிரிவினரால் வைத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளிலும் இவ்வாறு விபரம் திரட்டும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும்கூறப்படுகிறது. (153)

# 8 பவுண் சங்கிலியும் 1000 ரூபாவும் பறிபோனது

(வட்டுக்கோட்டை)

யாழ். நாச்சிமார் கோவிலில் கடந்த ஆடிச் செவ்வாய்த் தினத்தன்று நேர்த்திக்கடனைக் செலுத்துவதற்காகப் பொங்கல் பொங்கிய அடியார் ஒருவரின் 8 பவுண் தங்கச் சங்கிலியும், 1,000 ரூபா ரொக்கப் பணமும் பறிபோயுள்ளது.

ஆடிச் செவ்வாய்க்கிழமை நண்பகல் மேற்படி கோவிலின் ஒரு பகுதியில் சேட்டைக் கழற்றிப் போட்டுவிட்டுப் பொங்கிக்கொண்டிருந்த சமயம் சேட்டிற்குள் வைக்கப்பட்டிருந்த சங்கிலியும், பணமும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (139)

# அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நெல்லை. க. பேரனின் அஞ்சலிக் கூட்டம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள அஞ்சல் நிருவாக அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

## பெரு நாட்டில்

# 50 குழந்தைகளின் சடலங்கள் புதைகுழியிலிருந்து மீட்பு!

[லண்டன்]
பெரு நாட்டின் காட்டுப் பகுதியொன்றில் சுமார் 50 குழந்தைகளின் சடலங்கள் பெரும் புதைகுழி ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

பெரு நாட்டின் தூரப் பிரதேசத்தில் காட்டுப்பகுதி ஒன்றிலிருந்து இச்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இக்குழந்தைகள் பிரேஸில் நாட்டு எல்லைக் கருகில் காட்டுப் பகுதியில் உள்ள தங்கச் சுரங்கத்தில் அடிமைகளாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்களாம்.

சடலங்களில் சூட்டுக் காயமும், மிகவும் கொடூரமான சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதுமான பல அடையாளங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# ராஜீவ் கொலையில் வல்லரசுகள் சம்பந்தம்?

[புதுடில்லி]
திரு ராஜீவ் காந்தி கொலையில் வல்லரசுகள் சம்பந்தப்பட்டிருக்கலாமென உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் மக்களவையில் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து இப்பிரச்சனை எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதை நாம் உணரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதே கருத்தை பல எம். பிக்கள் மக்களவையில்கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## ஒய்வூதிய கொடுப்பனவுகள்

[யாழ்ப்பாணம்]
இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை ஒய்வூதியக் கொடுப்பனவுக்காக கீழ்க்கண்ட வங்கிக் கிளைகள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம், காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை (ஸ்ரான்லி வீதி), மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் 2-ஆம் கிளை [ஸ்ரான்லி வீதி].

## சாரணர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]
வடமாகாணத்திலுள்ள சகல சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணத் தலைவிகள், திரிசாரணர்கள், சிரேஷ்ட சாரணர்கள் அனைவரும் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு பாலம் பொதுப் பணிமன்றத்தில் கூடுமாறு மாறு சாரண சேவைப்பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (வி)

## போர்க்கால கருத்தரங்கு

[நாவற்குழி]
தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் போர்க்கால கருத்தரங்கு இன்று 17ந் திகதி சனிக்கிழமை இரவு 8-00 மணிக்கு நுணுவில் சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் போர்க்கால கருத்தரங்கு நடைபெறவுள்ளது. [107]

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நேற்று வெள்ளிக்கிழமை அரியாலை பூம்புகார் மாதிரிக் கிராமத்தில் போர்க்கால கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்கள்.

## இன்று

(பருத்தித்துறை)
புனோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வராத்துப்பளைக் கிளைக்கும், வியாபாரிமூலை கிளைக்குமானகிளைக்குழுத் தேர்தல்கள் இன்று 17ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## மூடப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் சனிக்கிழமை தினங்களில் பிற்பகல் 2 மணியுடனும், ஞாயிறு முழு நாளும் மூடப்படவேண்டுமென வர்த்தக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (வி)

# யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பு

[யாழ்ப்பாணம்]
யாழ். பல்கலைக்கழகம் முதற் தடவையாக வெளிவாரி பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது

கலை, வர்த்தகம் ஆகிய கற்கைநெறிகள் முதலில் தொடங்கப்படவிருக்கின்றன. மேற்படி துறைகளை ஆரம்பிப்பது சமபந்தமான தீர்மானங்கள் பல்கலைக்கழகக்கலைப்பீடம் பல்கலைக்கழக மூதவையினால் எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேரவையின் தீர்மானம் இம்மாதம் 17ம் திகதி எடுக்கப்படவிருக்கிறது.

வெளிவாரி பட்டப்படிப்பு பதிவுகள் அக்டோபர் மாதம் முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு வரவிருக்கிறது. (53]

### வீரவணக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
துரை தேவன், வேலணை] கடந்த 30-ம் திகதி புல்லாவெளியில் நடைபெற்ற நேரடி மோதலில் லெப். தாசன் [அன்ரனிதாசன் தேவலிங்கம். மயிலிட்டி] ஆகிய வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர் (வி)

### இடம்பெயர்ந்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
யாழ். மாவட்டத்தில் பரீட்சை எடுப்பதற்கு வசதியாக சுட்டிலக்கங்கள் வழங்கப்படும்''.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரிடமிருந்து தகவல வந்ததாகத் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் பரீட்சை நடாத்த முடியாதிருக்கின்றது எனவும் நல்ல சூழ்நிலை வந்ததும் பரீட்சை நடாத்துவதற்குரிய அறிவுறுத்தல்களுக்கு காத்திருக்குமாறும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்'' எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ். மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
துக் கூறியுள்ளேன்.''

இவ்வாறு, யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், நேற்று யாழ். செயலகத்தின் முன்னால் மறியல் போராட்டம் நடாத்திய ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''இன்றையநிலையில் உங்களைப் போல் தான் நானும் அதிக விலைகொடுத்து சவர்க்காரம், அரிசி, சீனி போன்றவற்றை வாங்குகின்றேன். ஆகவே நீங்கள்படும் வேதனைகளையும் கஷ்டங்களையும் நான் நன்கு அறிவேன். நீங்கள் என்னிடம் சமர்ப்பித்த இந்த மகஜரை உடன் மேலிடத்துக்கு அனுப் ஆவன செய்வேன் என்று கூறினார்.

மேற்படி மறியல் போராட்டத்தை முன்நின்று நடாத்திய ''தமிழர் நலன் காக்கும்ஒன்றியத்தின், பிரதிநிதிகளில் ஒருவரான, உருத்திரா செல்லையா பேசுகையில், நாமும் இலங்கைப் பிரஜைகள்தான் என்பதை ஜனாதிபதி ஒப்புக்கொண்டால், எமக்கு சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். எமது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும்'' என்றும் கூறினார்.

நேற்றுக்காலை 7 மணிக்கு யாழ். செயலகத்தின் முன் ஆரம்பமான, மறியல் போராட்டம் நண்பகல்12-30 மணிக்கு முடிவடையும் போது யாழ். அரச அதிபரிடம் நீண்ட மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் மறியல் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு நேரடியாக வந்து மகஜரை கையேற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## ரெலோ உறுப்பினர் உயிரிழப்பு

[யாழ்ப்பாணம்]
மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் இரு ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்

நேற்றுமுன்தினம் ஆரையம்பதிப் பகுதியில் வாகனத்தில் வந்த ரெலோ உறுப்பினர்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## சிப்பாய் பலி

[கொழும்பு]
மன்னாரில் கொக்குபடையான் இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு நேற்று பலியாகியுள்ளதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

### வெற்றிலைக்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
இப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினருக்கு நவீன ரக ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். [சி]

### காவலரண்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் மீது பெருமளவிலான புலிகள் தன்னியக்கத் துப்பாக்கிகள் சகிதம் வந்து தாக்குதலை நடாத்தியுள்ளனராம்

இரு தரப்புக்குமிடையில் கடும் மோதல் சில மணி நேரம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### இந்திய விமானம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
பெற்ற இப்பரிதாப விபத்துச் சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள், விமானம் ஓட்டிகள், பயணிகள். சிப்பந்திகள் உட்பட அனைவருமே கொல்லப்பட்டுவிட்டனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற இந்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் மாதவராவ் சிந்தியா உட்பட உயர்மட்ட அதிகாரிகள் பலர் ஸ்தலத்திற்கு விரைந்தனர். (க)

### ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னார்.

பின்னர் அப்பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். [வி]

### வடக்கு கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்பிற்கு அடுத்த ஆண்டிற்கு 2,500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

### ஆனையிறவிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

தொடர்ந்து இடம்பெறும் ஷெல் தாக்குதல்களால் இடம்பெயர்ந்த மக்கள் அங்கு திரும்பவும் வந்து குடியிருக்கமுடியாதநிலையில் உள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர் (56)

### அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இச்சம்பவத்தின்போது திரு. ப. சிதம்பரத்திற்கு காலில் இரத்தக் காயம் ஏற்பட்டதாகவும் கல்லெறி, கூழ் முட்டை வீச்சு போன்ற வன்முறைச் சம்பவங்கள் தாராளமாக இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவத்திற்கு முன் விமான நிலையத்தில் வைத்து இவருக்குக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

### மறியல் போராட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பாகங்களிலும் இருந்து மறியற் போராட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு வந்தவண்ணமிருந்தனர். பல்வேறு ஸ்தாபனங்கள், அமைப்புகள். ஒன்றியங்கள் இதில் கலந்து கொண்டன.

கடும் வெய்யிலுக்கு மத்தியிலும் அரசுக்கு எதிரான சுலோக அட்டைகள் ஏந்திய படி மக்கள் கூடி இருந்தனர். குறிப்பாக இந்த மறியல் போராட்டத்தில் பெண்களே கூடியளவு பங்கு பற்றிதைக் காணக்கூடியதாக இருந்தது.

நிவாரண நிறுத்தம் தமிழரை அழிக்கும் தந்திரம்.

அகதிகளாக்கி வயிற்றில் அடிக்காதே அரசாங்கமே சிந்தித்து செயற்படு.

தமிழர் எம் பசியை போக்குவது நேபாம் குண்டுகளா?

எரிபொருள் இல்லை, மின்சாரம் இல்லை ஈழம் மட்டும் உங்களின் உரிமையா?

பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் நிவாரணம் பெறுபவர் சிங்களவரா? [56]

## மரண அறிவித்தல்

### சார்ஜன் மேஜர் தங்கராசா

(ஒய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

சங்கானையைச்சேர்ந்த A. P.தங்கராசா 16-08-91ல் காலமாகிவிட்டார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், கமலாதேவியின் அன்புத் தந்தையும்(சிவம்), நாகலிங்கத்தின் மைத்துனரும், உருத்திரேஸ்வரன், துஷ்யந்தினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-08-91 [இன்று] சனிக்கிழமை காலை 11-00 மணியளவில் சங்கானையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
கமலாதேவி
(மகள்)

தேவாலய வீதி,
சங்கானை,

(சி-5133)

### முத்துக்கிருஷ்ணர் தம்பித்துரை

கரம்பனூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம், அரசடி வீதியில் வசித்துவரும் முன்னாள் எகலியகொடை வர்த்தகருமாகிய முத்துக்கிருஷ்ணர் தம்பித்துரை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பேரின்பமணி (இன்பம்). பத்மநாதன் (Canada), பாலச்சந்திரன் [U. S. A.], பாலகிருஷ்ணன்[சாவகச்சேரி, இந்துக்கல்லூரி], ராதா, ரூபா [Germany], சாந்தி [Canada] ஆகியோரின் அருமைத் தந்தையும் வாமதேவன் [ஒய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்], மங்கையற்கரசி (Canada), சரஸ்வதி [யாழ். போதனாவைத்தியசாலை], ஜெயசோதி, ஜெகநாதன் [விவசாய ஆராய்ச்சி நிலையம், கிளிநொச்சி], ஒகஸ்ரின் [Germany], பவகரன் [Canada] ஆகியோரின் மாமனாரும், நந்திவர்மன், பிரதீபா, காஞ்சனா, அஜித்குமார், தர்சினி ஆகியோரின் பாட்டனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணம், அரசடி வீதி, 125ம் இலக்க இல்லத்தில் 17-08-91 (இன்று) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
த. பாலகிருஷ்ணர்
[சி-5134

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/188886/81